# அறநூல்கள் கூறும் அணிகள்

**ந.கலைமகள்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
அரசர் கல்லூரி
திருவையாறு

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை பல்வேறு வகையில் உள்ளன. மனித வாழ்வை பிரதிபலித்துக் காட்டுவதே இலக்கியமாகும். இலக்கியங்களைக் கற்பதன் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலை அறிந்து கொள்ள இயலும். மக்கள் தம் வாழ்க்கை நெறியினின்று த(டம்)டு மாறும்நிலையில் அவர்களுக்குத் தகுந்த கருத்துக்கள் கூறி நெறிப்படுத்துவதற்காகத் தோன்றிய நூல்கள் நீதி இலக்கியம் அல்லது அறஇலக்கியம் எனப்படுகிறது. மக்களை நல்வழிப்படுத்துவதற்காக எழுந்த அறநூல்களுள் திருக்குறளில் எண்ணற்ற அணிகள் கூறப்பட்டுள்ளன. எனினும் அந்நூலை விடுத்துப் பிற அறநூல்கள் எவற்றையெல்லாம் அணியாகக் கூறுகின்றன என்பதனையும், இலக்கண நோக்கில் கூறப்படும் அணிகளைக் கூறாமல் அணி என்ற சொல்லாட்சி மற்றும் அதன் பொருள்கொண்ட வனப்பு போன்றவற்றின் அமைப்பில் இடம்பெறும் அணிகளைப் பற்றிய செய்திகளையும் இக்கட்டுரையில் காணலாம்.

## அணி

அணியென்பது பல பொருள் குறித்த ஒரு சொல்லாகும். அடுக்கு, அணியென்னேவல், கூட்டம், சம்பரம், சமீபம், அச்சாணி, அலங்காரம், அழகு, ஆபரணம், எல்லை, ஏர்ச்சீர், ஒழுங்கு, ஓரிலக்கணம், நன்மை, நிடை, படைவகுப்பு, பெருமை, பூமாலை, நுணாமுகம், இனிமை, அன்பு, வரிசை, செய்யுளணி, கம்மாளக் கருவி, ஓர் உவம உரு, சேனைத்திரள், இனம், ஒப்பு, சுண்ணி என பல பொருளினைக் கொண்டுள்ளது. (மதுரைத் தமிழ்ப் பேரகராதி).

அணி என்னும் சொல்லிற்கு பல பொருள் இருப்பினும், அணி என்றால் அழகு என்னும் பொருள் என்பது படித்தவர் முதல் பாமரர் வரை பலராலும் அறியப்படுகிறது. அழகு என்பது உயிருள்ளவை முதல் உயிரற்றவை வரையிலும், இறைவனால் படைக்கப்படுவது முதலாக மனிதனால் படைக்கப்படுவது ஈறாக அனைத்திற்கும் உரியது. நாம் ஒன்றினைப் பார்ப்பதும் கேட்பதும் அழகினைப் பொறுத்தே அமையும்.செய்யுளுக்குரிய உறுப்புகளாக முப்பத்து நான்கினைக் கூறும் தொல்காப்பியர் அவற்றுள் வனப்புகளாக எட்டு உறுப்புகளைக் கூறுகிறார். அவற்றுள் அழகும் உறுப்பாக உள்ளது.

**அம்மை அழகு தொன்மை தோலே**
**விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப் (தொல்.பொருள்.310)**

ஒரு கருத்தினை வலியுறுத்தும் நூலின் அழகினைப் பொறுத்தே அது கூறும் செய்தியை மக்கள் ஏற்கும் சூழலும் உள்ளது. மக்களுக்குக் கருத்துக்களைக் கூறும் நூலின் அழகினை

**சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்**
**நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்**
**ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்**
**முறையின் வைப்பே உலகம்மலை யாமை**
**விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்த(து)**
**ஆகுதல் நூலிற்கு அழகுஎனும் பத்தே. (நன். எழுத்து.13)**

என்னும் நூற்பா மூலமாக நன்னூல் எடுத்துரைக்கிறது. மனிதர்களுக்கு அணியாகத் திகழக்கூடியவை எவை என்பது பற்றி அற நூல்கள் அழகாக உரைக்கின்றன.

**சொல் அணி**

தமிழின் இலக்கண நூல்களில் அணியிலக்கண நூல்கள் பல உள்ளன. அவை பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்று வகைப்படுத்தி அவற்றுள் பலவகையான அணிகளைக் கூறுகின்றன. சொல்லணியியல் என ஒர் இயலே இருப்பதன் வழியாகச் சொல் அழகின் முக்கியத்துவம் அறியப்படுகிறது.

உலகில் தோன்றிய உயிர்களிடையே சிறப்பான ஒன்றாக மனித இனத்தில் இருப்பது பேசுந்திறனே ஆகும். பேசும் ஆற்றல் இருப்பதனால் தேவையற்றதைப் பேசக்கூடாது.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (100)**

இனிய சொற்களையே பேச வேண்டும் என்று கூறும் திருக்குறள்

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு. (129)**

என்னும் குறளின் மூலம் அர்த்தமற்ற இகசப்பான பேச்சினால் ஏற்படும் துன்பநிலையையும் விளக்குகிறது.

மனிதர்கள் தங்களின் பாதம் முதல் மயிர் வரை அழகு செய்து கொள்வது இயல்பு. அவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளும் பிறர் விரும்பும் தலைமுடியால் வரும் அழகு, மார்பின் அழகு, நகத்தின் அழகு, காதின் அழகு, அழுக்கில்லாப் பல்லின் அழகு போன்றன அழகல்ல. நல்ல நூல்களோடு பொருந்திய சொல் திறனால் வரும் அழகே அழகு என்பதனை

**மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்**
**உகிர்வனப்பும் காதின்வனப்பும் செயிர் தீர்ந்த**
**பல்லின்வனப்பும் வனப்புஅல்ல நூற்கு இயைந்த**
**சொல்லின் வனப்பே வனப்பு. (சிறுபஞ்சமூலம் 35)**

என்னும் பாடல் சொல்லின் அழகை உரைக்கின்றது.

**கல்விஅணி**

மனித இனத்தின் அறிவு ஆற்றலுடன் வளர்ச்சி பெறுவதற்கு கல்வி என்றும் இன்றியமையாததாகிறது. மனிதன் மனிதனாக வாழவும், புனிதனாகி நல்லறிவு பெறவும், வாழ்வில் வளம் செழிக்கவும் அவசியமான ஒன்று கல்வி. கல் என்பதன் அடிப்படையிலிருந்து கல்வி என்ற சொல் தோன்றியது. கல்வி என்றால் ஆழமாகத் தோண்டுதல் என்று பொருள். அறியாமையைப் போக்கி அறிவை விரிவுபடுத்தும் ஆற்றல் மிக்கது கல்வி. நுண்மை பயக்கும்

பல நூல்களிலிருந்து ஆழமாகத் தோண்டி எடுத்து அறிவதே கல்வியாகும். மனிதன் தன் வாழ்நாள் முழுதும் கற்றாலும் கற்க முடியாத அளவிற்கு கல்வி பரந்து காணப்படுகிறது. மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன. அதில் இன்பத்திற்கு அறிவுடைமையும் துன்பத்திற்கு அறியாமையும் காரணமாக அமைகின்றன. அறியாமை இருளை அகற்ற வேண்டுமானால் அறிவுடைமை என்னும் விளக்கு ஏற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் வாழ்க்கை என்றும் பிரகாசமாக இருக்கும்.

வீட்டில் விளக்கேற்றுவதன் மூலம் இருளை அகற்றி ஒளிமயமாக்குவது என்றும் பெண்களின் இயல்பு. வீட்டின் ஒளி மட்டும் போதுமானதல்ல. நாட்டிற்கும் அழகூட்ட வேண்டும். ஆகையினால் கல்வி ஆடவர்க்கு மட்டுமல்ல மகளிர்க்கும் தேவை என்னும் கருத்துடன் மனிதர்களின் இயல்பான தலைமுடி, உடை, மெய் போன்றனவற்றைச் செயற்கைப் பொருட்களால் மெருகேற்றிக்கொள்ளும் அழகினைவிட கல்வியின் அழகே சிறந்தது என்பதனை

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு. (நாலடி 14 கல்வி 1)**

என்னும் பாடல் விளக்குகிறது.

மனிதனாகப் பிறந்த ஒருவனுக்கு என்றும் அணிகலனாக அமைவது கல்வி என்னும் கருத்தினை

**நண்ணும் மறுமைக்கு அணிகலம் கல்வி (திரி. 52)**

அறிவினால் தான் ஒருவன் சிறப்படைய முடியும். அறிவினால் வரும் அழகே சிறப்பனதாகவும் அமையும். கட்டாயம் அணிய வேண்டிய ஆடைகளுக்கு மேலாகக் கருவிகளால் ஒளியேற்றப்பட்ட தங்கம், சந்தனம் போன்ற அணிகலன்களால் அழகூட்டிக் கொள்வதனால் என்ன? என்று கேட்பதன் மூலம் கல்வி சிறந்த அணி என்னும் செய்தி

**அறிவினால் மாட்சி ஒன்றுஇல்லா ஒருவன்**
**பிறிதினால் மாண்டது எவனாம்? பொறியின்**
**மணிபொன்னும் சாந்தமும் மாலையும் மற்றுஇன்ன**
**அணிஎல்லாம் ஆடையின் பின். (பழமொழி 271)**

என்று உரைக்கப்படுகிறது.

**அறியாமை அணி**

நாம் அனைத்தையும் அறிந்திருப்பதனைவிட அறியாமல் இருப்பதும் சில தருணங்கள் அழகு தான். அறியாமை இருளிலிருந்து நீங்க வேண்டும் என்ற கருத்து நிலவினும் சிலநேரங்களில் அறியாமையும் சான்றோர்களுக்கு அழகுதரக் கூடியதாகவே அமைந்துள்ளதனை

**முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்**
**தொல்லை அளித்தாரைக் கேட்டுஅறிதும் சொல்லின்**
**நெறிமடல் பூந்தாழை நீருநீர்ச் சேர்ப்ப**
**அறிமடமும் சான்றோர்க்கு அணி. (பழ 361)**

பாடல் வழி அறிய முடிகிறது.

**பெண்ணுக்குரிய அணி**

பெண்களுக்கு அழகு தரக்கூடியது அணிகலன்களே என்னும் கருத்து நிலவுகிறது. பல ஆபரணங்களையணிந்து செயற்கைப்பூச்சுகளைப் பூசித் தங்களை அழகுபடுத்திக் கொள்வதனையே இன்றையகாலச் சூழலில் பெண்கள் பலரும் விரும்புகின்றனர்.தலைவியின் பண்புகள் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர்

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும்பெண்பாற்கு உரிய என்ப. (தொல்.களவு.8)**

என்பதன் வழி அச்சம், நாணமாகிய வெட்கம், பேதைமை என்னும் மடன் ஆகிய பண்புகள் பெண்களுக்குரியவை என்றுரைக்கின்றது. மேலும்

**காமத் திணையில் கண்நின்று வரூஉம்**
**நாணும் மடனும் பெண்மைய ஆகலின்**
**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**
**நெறிப்பட வாரா அவள் வயினான. (தொல்.களவு.18)**
**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத் (தொல்.களவு.23)**

ஆகிய நூற்பாக்கள் வழி பெண்ணிற்கு நாணம் முக்கியமானது அது உயிரைவிடவும் சிறந்தது என்பதனை விளக்குகிறது. இதன் மூலமாகப் பெண்ணிற்கு அழகு தரக்கூடிய தன்மையும் இப்பண்புகளே என்பதனை அறிய முடிகிறது. பெண் என்பவளே அழகுதான் என்று கூறும் நூல்கள் அப்பெண்ணுக்குரிய அழகு பற்றிய செய்திகளையும் அழகாகக் கூறுகின்றன.

**பெண்மை நலத்துக்கு அணியென்ப நாணம் (நான்மணி.9)**
**பெண்ணுக்கு அணிகலம் நாண் உடைமை (திரி. 52)**
**பெண்ணின் இடைதனக்கு நுண்மை வனப்பாம் (சிறுபஞ்ச. 5)**

என்பதன் வழியே குலமகளின் அழகானது நாணம் என்பது அறியப்படுகிறது.

மஞ்சள் அழகைவிடவும் கல்வி அழகு தான் அழகு என்றும் பெண்ணின் அழகுக்கு நாலடி விளக்கம் தருகிறது.

ஒரு பெண்ணுக்கு இடை, தோள், நடை, நாண், கழுத்து இவற்றின் அழகுகள் எல்லாம் அழகாகா.மாறாக எண், எழுத்து என்னும் கணக்கு, இலக்கிய இயல்களைக் கற்றுக்கொள்ளும் அழகே மிகவும் சிறந்தது என்னும் கருத்தினை

**இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்**
**நடை வனப்பும் நாணின் வனப்பும் புடை சால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பு அல்ல எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு. (ஏலாதி. 74)**

என்ற பாடல் சிறப்பாக எடுத்தியம்புகிறது.

**அழகு தரும் அணி**

அணி என்பது ஆபரணம் ஆகும். ஆபரணம் அணிவது அழகுபடுத்திக் காட்டுவதற்காகத்தான். ஒரு பொருளையோ, மனிதனையோ அழகூட்டிக் காட்ட வேண்டுமெனில் அவசியமாகக் கருதப்படுவது ஆபரணம். அவ்வகையில் நல்ல நிலத்திற்கு நெல், குளத்திற்கு தாமரைப்பூ பெண்ணுக்கு நாணம், தனக்கு தருமம் சிறந்த ஆபரணங்களாக இருக்கும் என்பதனை நான்மணிக்கடிகை பாடல் (9)

**நிலத்துக்கு அணிஎன்ப, நெல்லும் கரும்பும்**
**குளத்துக்கு அணிஎன்ப, தாமரை பெண்மை**
**நலத்துக்கு அணிஎன்ப, நாணம், தனக்கு அணி**
**தான்செல் உலகத்து அறம்.**

என்பதன் வழி தெளிவுறுத்துகிறது.

நடுவுநிலைமை என்பது நேர்மையாகப் பாரபட்சமின்றி இருப்பதாகும். இந்நடுநிலைமை எல்லோரிடமும் இருப்பதில்லை இருத்தல் சிறப்பு. அது அழகானதாகவும் இருக்கும். இதனை

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி. (குறள்.118)**

என்று துலாக்கோலை உவமையாகக் காட்டி அதனைப்போல் நடுவுநிலைமை தவறாதிருத்தல் அறிவுடையவர்களுக்கு அழகு என்னும் கருத்தினைக் கூறுகிறது.

**......................நடைதனக்குக்**
**கோடாமொழி வனப்பு கோற்கு அதுவே சேவகற்கு**
**வாடாத வன்கண் வனப்பு. (சிறுபஞ்ச.5)**

என்னும் பாடல் மூலம் ஒருவனின் நல்ல நடத்தைக்கும், செங்கோல் அரசனின் சிறப்பிற்கும் அழகு தருவது நடுவுநிலைமைதான் என்பதனை அறிய முடிகிறது.

**நல்லவர் அணி**

மனிதர்கள் செய்யும் நல்ல செயல்களே அவர்களுக்கு என்றும் அழகு தருவனவாகும். ஆயினும் புகழ், செல்வம், மேன்மையுறு சொல், தொண்டு, கல்வி, வள்ளன்மை என்ற ஆறு இயல்புகளும் நல்லவர்க்கு அழகு தருவது என்னும் செய்தியினை

**சென்றபுகழ் செல்வம் மீக்கூற்றம் சேவகம்**
**நின்றநிலை கல்வி வள்ளன்மை - என்றும்**
**அளிவந்து ஆர்பூங்கோதாய்! - ஆறும் மறையின்**
**வழிவந்தார் கண்ணே வனப்பு.**

என்னும் ஏலாதி பாடல் (1) விளக்குகிறது.

**இன்னா நாற்பது கூறும் அணி**

வாழ்க்கையில் தேவையில்லாதன, துன்பம் தருவன ஆகியன இன்னா என்று குறிப்பிடப்படுகிறது.

**பந்தம் இல்லா மனையின் வனப்பு இன்னா**
**தந்தை இல்லாத புதல்வன் அழகு இன்னா (1)**
**நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா (7)**
**வண்மை இலாளர் வனப்பு இன்னா (9)**

என்று குறிப்பிடுவதன் மூலம் அதன் நேரெதிராகக்கொண்டு இல்லா என்னுமிடத்தில் இருக்குறும் இன்னா என்னுமிடத்தில் இனிது என்றும் பொருள் கொண்டால், அவை வாழ்விற்கு அழகு தரக் கூடியன என்று புரிந்துகொள்ள முடிகிறது. அழகு இயற்கையாகத் தோன்றுவது அது செயற்கையழகினும் மேம்பட்டது இயற்கை என்றும் உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை. ஆயினும்

**வளமை இலாளர் வனப்பு இன்னா (27)**

என்பதன் வழி செல்வர் பெற்றிருக்கும் அழகே அழகு என்றும் வறியவர் பெற்றிருக்கும் அழகு இன்னா துன்பம் தரக்கூடியது என்றும் விளக்குகிறது. இக்கருத்து சிந்தித்தற்குரியதாகும்.

**யாதும் வளமையோடு ஒக்கும் வனப்பு இல்லை (நான்மணி.32)**

செல்வ வளமைக்கு நிகரான அழகு இல்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

**முடிவுரை**

மக்களை நல்வழிப்படுத்தி வாழச் செய்வதற்காக எழுந்தவை அறநூல்கள். இந்நூல்களில் எண்ணற்ற கருத்துக்கள் பொதிந்துள்ளன. அவை அழகு என்னும் சொல் மட்டுமின்றி அதன் பொருள்கொண்ட அணி, வனப்பு, அணிகலம், அணிகலன் என்னும் சொற்களைக்கொண்டும் மக்களிடையே பல கருத்துக்களை அழகாக உரைக்கின்றன. அதன் வழி அழியக்கூடிய அழகினைத் தேடி அலையாமல் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் கல்வியினை

**கற்க கசடறக் கற்பவைக் கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்று வள்ளுவர் உரைத்தபடி பிழையின்றிக் கற்று அந்நூல்களில் கூறப்பட்டிருப்பதைப் போன்று நல்ல நெறியினைப் பின்பற்றி இனிமையானச் சொற்களைக் கூறுதல், பிறரை வருத்தாமை, தருமம் செய்தல் போன்றவற்றின் மூலம் அழகு பெற்று அழியாப் புகழுடன் நிலைத்து நிற்போம் என்ற கருத்தினைச் செறிவுடன் இயம்புகின்றது.

**பார்வை நூல்கள்**

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை.
3. நன்னூல், எழுத்ததிகாரம்.
4. புதிய பார்வையில் பதினெண் கீழ்க்கணக்கு.